

பலாலியைப் பிறப்பிடமாகவும் தோப்பு
அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்டு
வாழ்ந்து அமரத்துவம் அடைந்த

# திருமதி சின்னத்தங்கம் செல்லப்பா

அவர்களின் சிவப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 29.06.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பலாலியைப் பிறப்பிடமாகவும் தோப்பு
அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்டு
வாழ்ந்து அமரத்துவம் அடைந்த
திருமதி.சின்னத்தங்கம் செல்லப்பா
அவர்களின் சிவப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 29.06.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக்காணிக்கை

அன்புக்கு அணிகலனாய், பாசத்தின் இருப்பிடமாய், பொறுமையின் பொக்கிஷமாய், கொடைக்கு வள்ளலாய், சுமைதாங்கியாய் வாழ்ந்து எமது இதயத்தில் என்றும் அணையாத் தீபமாய் சுடர் வீசும், மறைந்தும் மறையாத எம் அன்புத் தெய்வத்தின் பாதக் கமலங்களுக்கு

இந் நினைவுமலர்

எங்கள் காணிக்கையாக இருக்கட்டும்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அன்னை மடியில்

12-04-1923

ஆண்டவன் அடியில்

20-05-2008

அமரர்

# செல்லப்பா சின்னத்தங்கம்

## திதி வெண்பா

ஆண்டு சர்வதாரி ஆனநல் வைகாசி
பூண்டிடு பூரணை நந்நாளே – புவி விட்டு
பூவைநல் சின்னத் தங்கம் போயினளே
பூரணனை நாடியே பேசு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப்பாக்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்
சொன்னவனே தூய்மெய்ச் சுகந்தவனே மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே நெஞ்சடையந் சேவகனே
தற்பரனே நின்தாள் சரண்.

## தேவாரம்

கடிதென வந்த கரிதனையுரித்து
அவ்வுரிமேனி மேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய் வளை மடந்தை
பிறை நுத லவளொடு முடனாய்க்
கொடி தெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுனித்திலஞ் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமாமலையமர்ந்தாரே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச்சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே பாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப்பிடித்தே
எங்கெழுந்தருளுவதினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஏக நாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை யெதிரில்
போகநா யகனைப் புயல் வண்ணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகு திருவீழி
மிழலை விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை யன்றி மற்றொன்றிலும்
உண்டெனவுணரிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

மீண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்துவம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி
ஈசற் காட் செய்மின்குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள் அளவில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றுமுள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியாய் நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி -
-போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

துள்ளுமதவேள் கைக்கணையாலே
தொல்லை நெடுநீலக் கடலாலே
மெள்ள வரு சோலைக் குயிலாலே
மெய்யுருகுமானைத் தழுவாயே
தெள்ளு தமிழ் பாடத் தெளிவோனே
செய்ய குமரேசத் திறலோனே
வள்ளல் தொழு ஞானக் கழலோனே
வள்ளி மணவாளப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.

## சாந்தி

ஓம் குருர் பிரம்மா குருர் விஷ்ணு குருதேவா மகேஸ்வரா
குரு ஸாசஷாத் பரப்பிரஹ்மா தஸ்மை ஸ்ரீ குருவே நம.

## காயத்திரி மந்திரம்

ஓம் பூர் புவ ஸ்வா
த்த ஸலித்துர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய திமஹி
திய யோ யோந பரசோதயாத்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலாலியைப் பிறப்பிடமாகவும் தோப்பு அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி.செல்லப்பா சின்னத்தங்கம் அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

இயற்கை எழிலும் வளமும் நிறைந்து விளங்கும் இந்துமா சமுத்திரத்தின் நித்திலமான ஈழத்திரு நாட்டின் சிரசாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் அன்பும் பண்பும் ஒழுக்கமும் விருந்தோம்பலும் நிறைந்து விளங்கும் பால் ஆழி என்று போற்றப்படும் பலாலி எனும் அழகிய கிராமம் உண்டு. இங்கு இயற்கையால் சூழப்பட்ட இடமாகவும். விவசாய பூமியாகவும் காணப்பட்டதோடு விமானத்தளம், பாடசாலைகள், கோயில்கள், வைத்தியசாலை என அனைத்து வசதிகளுடன் காணப்பட்ட கிராமமாக பலாலி காணப்பட்டது.

பலாலியில் சீரும் சிறப்புமாக வாழ்ந்த சின்னர் எனும் வாலிபனுக்கும் சின்னாச்சி எனும் மங்கையும் இல்லறத்தில் இணைந்து இல்லறத்தை நல்லறமாய் நடர்த்தி தமக்கு துணைகளாக பொன்னையா, சின்னத்தங்கம், பொன்னு, சின்னத்துரை, இளையதம்பி, சரவணமுத்து எனும் ஆறு செல்வங்களைப் பெற்றெடுத்து இல்லறத்தை இன்பமாக நடத்தினர். தமது பிள்ளைகளை கண்ணை இமைகாப்பது போல வளர்த்தனர். தமது பிள்ளைகளின் இனிமையான மழலைப் பேச்சைக் கேட்டுக் கொண்டு தமது வாழ்க்கையை நடாத்தி வந்தனர். இவ் ஆறு பிள்ளைகளையும் தமது விருப்பத்திற்கு அமைவாக திருமணம் செய்து கொடுத்து தம் ஊரிலேயே வாழச் செய்தனர். இவர்களில் இரண்டாவது பிள்ளையே சின்னத்தங்கம் இவர் 1923ம் ஆண்டு 04ம் மாதம் 12ம் திகதி இவ் வையகத்தில் உதித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சிறுவயதிலிருந்து தான் செய்யும் தொழிலே தெய்வம் என வாழ்ந்தவர். தன் தொழிலில் கண்ணும் கருத்துமாய் இருப்பவர். பிறருக்கு உதவிசெய்வதில் வல்லவர். இவர் பருவ வயதை அடைந்ததும் இவரது பெற்றோர் செல்லப்பா எனும் செல்வ மணவாளனைக் கரம் பிடித்துக் கொடுத்தனர். இல்லறத்தை நல்லறமாக நடத்தினர். "காதலன் ஒருவனைக் கைபிடித்து அவன் காரியம் யாவிலும் கைகொடுத்து" என்பதற்கு இணங்க வாழ்ந்த வாழ்க்கையின் பயனாக மும்மணிகளை முத்துக்களாய் பெற்றெடுத்தனர்.

இவர் தனது ஒரேயொரு புதல்வனான பொன்னையாவை தன் கணவனின் சகோதரியின் மகளான பொன்னுப்பிள்ளையை அன்புடனும் பாசத்துடனும் அரவணைப் போடும் மருமகளாகத் தேர்ந்தெடுத்து நிறைவு கண்டு மகிழ்ந்தர்.

தனது மூத்த மகளான நல்லபிள்ளைக்கு தன் அண்ணனின் மகனான தங்கராசாவை மருமகனாக தேரந்தெடுத்து மனநிறைவு பெற்றனர். தங்கராசாவும் நல்லபிள்ளையும் இல்லறத்தை நல்லறமாக நடாத்தி மோகனாதேவி, திருலோகச்சந்திரன், லலிதாதேவி, றஞ்சனாதேவி, றஜிதாதேவி, கோணேஸ்வரன், கேதீஸ்வரன், துர்க்காதேவி எனும் எட்டுச் செல்வங்களைப் பெற்றெடுத்துப் பேரின்பம் அடைந்தனர்.

அன்பான மகளான அன்னப்பிள்ளைக்கு சிதம்பரப்பிள்ளை சின்னத்தங்கம் அவர்களின் இளையபுதல்வனாகிய இராசதுரையைக் கைபிடித்துக் கொடுத்து இணையிலான இன்பமடைந்தனர். இராசதுரையும் அன்னப்பிள்ளையும் மனையறம் காத்து மனைக்கு நல்ல அணிகலன்களாக சுசீலன், சுமிதா, சுவீந்திரன், சுகந்தன் எனும் நால்வரை நன்முத்துக்களாக பெற்றெடுத்து முழுநிலவாய் வாழ்ந்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைபிடித்த கணவனுக்கு நல்லமனையாளாகவும் தலைசிறந்த இல்லத்தரசியாகவும் பேர்த்தியாராகவும் அயலவர்களுக்கும் உறவினர்களுக்கும் நற்பண்புடையவராகவும் விளங்கிய சின்னத்தங்கம் அவர்கள் தனது பிள்ளைகளைப் போலவே தனது பெறாமக்களையும் மருமக்களையும் அன்போடு அரவணைத்து வாழ்ந்து வந்தார்.

இவர் இன்பத்துடன் வாழ்ந்த நாட்கள் உருண்டோடின சின்னத்தங்கத்தினுடைய வாழ்விலும் விதி விளையாடத் தொடங்கியது. தனது அன்புத் துணைவனை 1995ம் ஆண்டு 4ம் மாதம் 2ம் திகதி இழந்து தசரதனை இழந்த இராமன் போல துடிதுடித்தார். அன்றிலிருந்து சின்னத்தங்கம் தன் மகளிடம் சரண்புகுந்தார்.

தனது மக்களிடம் இருந்து வாழ்க்கையை கழித்தார். வாழ்க்கை என்பது விளக்கு போன்றது அதில் வினை என்கின்ற திரியை வைத்து விளக்கை ஏற்றுகிறோம். திரியும் நெய்யும் தீர்ந்து விட்டால் விளக்கு அணைவது போல வினையும் விதியும் முடிந்தால் வாழ்க்கை முடிவடைவது திண்ணம் அதே போல் இவவுடைய வினையும் விதியும் 2008ம் ஆண்டு 5ம் மாதம் 20ம் திகதி செவ்வாய்கிழமை மக்கள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள் மற்றும் ஊரவர்கள் ஏங்கிக் கலங்கிக் கதறியழவிட்டு அனைவரையும் நீத்து அமைதியுடன் மண்ணுலகத்தினை துறந்து கொண்டு விண்ணுலகத்தினை திறந்து சென்று தன்னிகரற்ற தலைவனின் சேவடியின் கீழ் சரணடைந்து விட்டார்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நல்லோர் நாமம் நானிலம் வாழ்க!!

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளின் மனக்குமுறல்

கண்ணாரக் கண்டு மனமார மகிழ்ந்து தினமும்
கதைகள் பேசி நின்றேன்
எல்லாமே அன்புடன் பேசி இறுதியாக
உண்ணாது இருந்தாய்
புண்ணாக என் மனம் அதனை நினைந்து
புழுவாய்த் துடிக்குதே அம்மா
விண்ணோடு நீ கலந்து விட்டாயே நிதமும்
விரதமிருக்கிறேன் உன் சாந்திக்காக.

## மகளின் மனக்கவலை

பாசத்துடன் எனை ஈன்ற அன்புத் தெய்வமே
பரிதவிக்க விட்டுச் சென்றாயம்மா
நேசத்துடன் எனை வளர்க்க என்றுமே
நெருக்கத்துடன் ஏணியாய் நின்றாயம்மா
தோசமென பொல்லாத பிணி உனை நாடியதும்
தொட்டணைத்து அமுதூட்டிக்காத்தேனம்மா
மோசமான நிலையறிந்து கொழும்பு விட்டு வந்ததும்
மொழிகள் சில மொழிந்தாயம்மா
நாசகாரம் காலனுன்னைக் கவர்ந்ததறிந்து
நடுநடுங்கிக் கதறி அழுதேனம்மா
தேசத்தில் உனைப் போல் கருணை படைத்த
தெய்வம் எனக்கு வேறில்லையம்மா
பாசமலர் நான் உன் அன்பிற்கு ஏங்குகிறேன்
வணங்குகிறேன் ஓம் சாந்தியம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர்களின் அவலக்குரல்

பாசத்துடன் அக்காவாக எம்முடன்
அரவணைப்பாக இருந்தாய்
நல்லதொரு தாயவளாக மிளிர்ந்தாய்
நல்ல விருட்சமாய் உயர்ந்தாய்
எல்லோருக்கும் இனியவளாய் மாறினாய்
எங்களிடம் அன்புமழை பொழிந்தாய்
பொல்லாத பலவினை உனைத்துரத்தவே
பொறுத்திருந்து படுத்து பறந்து சென்றாயே.

## மருமக்கள் மலகிய கண்ணீர்

மின்னலாய் வந்தவன் நொடியினில் கவர்ந்தான்
மீளாத் துயரில் வாடுகிறோம்.
இன்னமும் துடிக்கின்றோம் மாமி நாங்கள்
ஈடற்ற உங்கள் இழப்பின்கொடுமையால்
தன்னலமற்றது உங்கள் தயாளகுணம் மாமி
தாங்க முடியவில்லை உங்கள் பிரிவை
பொன்னான இறைவனின் திருவடிக்கு நீங்கள்
போகவேண்டுமென வணங்குகிறோம்.

## பேரப்பிள்ளைகள் வடித்த கண்ணீர்

எங்களைக் கதிகலங்கித் தவிக்க விட்டு
ஏன் அம்மம்மா காற்றாகிப் போனீர்கள்
உங்களைப் பார்ப்போர் கண்ணிற்கு இப்போது
ஊசலாடாத படமாகத்தான் தெரிகிறீர்கள்
மங்காப்புகழுடன் இன்னும் பலகாலம் எமக்கு துணையாக
மாட்சிமையுடன் வாழ்வீர்கள் என்றிருந்தோம்
தங்காது எம்மைவிட்டுச் சென்று விட்டீரே
தாங்கள் இறைவனின் தாளில் அமர்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூட்டப்பிள்ளைகள் அழுத கண்ணீர்

பாட்டுக்கள் பாடி எமைத் தாலாட்டுவாய் என்று
பகலிரவாய்ப் பார்த்திருந்தோமே
பூட்டி நீ பாதியிலே எமை விட்டு விட்டு
புதியதோரிடம் புகுந்து விட்டாயே
காட்டினிலே நீ தனிமையில் வாடுகிறாயா
கலங்கும் எம்மிடம் ஓடிவாராயோ பூட்டி
வீட்டிலே உமைக்காணாது எந்நேரமும்
விம்மி வெதும்புகிறோம் தெரிகிறதா.

## பேரமக்கள் பொழிந்த கண்ணீர்

அம்மா என்று அழைத்த ஆசை மனம் ஓயலையே
தப்பாது நீர் தந்த நினைவு ஈரம் காயலையே
இப்போதும் கேட்கும் நல்ல இனிய குரல் சாயலையே
முப்போதும் உம் முருவம் மறக்க மனம் கூடலையே
வஞ்சமில்லா உங்களிடம் தினம் தினம் பேசிய
அன்பு வார்த்தை நீங்கலையே
ஓயாது நீ எமை அழைத்த பாசம் மறக்கமுடியலையே
உண்ணாது நீ சென்ற சோகம் தீரலையே
அம்மாவை இனி எப்போ காண்போம்
ஒன்றும் தோணலையே!

## உற்றார் உறவினர் கலங்கிய கண்ணீர்

பாசத்தின் இருப்பிடமாய் திகழ்ந்தாய்
பண்பின் சிகரமாய் மிளிர்ந்தாய்
நேசத்தின் நிறைகுடமாய் இருந்தாய்
நெஞ்சிலே நல்லெண்ணங் கொண்டாய்
தேசமெல்லாம் போற்றும்படி நடந்தாய்
தெய்வமென மதித்திட ஒளிர்ந்தாய்
மாசற்ற உனை நினைந்து வாடி
மனங்கலங்கி மயங்கிவிழுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பொதுநியதி

கண்ணால் காண்பதும் பொய்யே
கண்டல்ல காதால் கேட்பதும் பொய்யே - உண்மை
தீர விசாரித்தறிந்தாலும் செயலில் மாறுமே
அரிய சின்னத்தங்கமும் அதுவே.

## தோற்றம்

உற்றார் ஆருவரோ!
உயிர் கொண்டு போகும் பொழுது
குற்றாலத்துறை கூத்தன் அல்லார் - தமக்கு
உற்றார் ஆருளரோ!

முடி சார்ந்த மன்னரும் மற்று முன்னோரும்
பிடி சாம்பலாய் வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்த
படி சார்ந்த வாழ்வை நினைப்பதல்லார் பொன்னியப்பல
அடி சார்ந்து நாமுய்ய வேண்டுமென் தேயறி வாரில்லையே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்சிந்தனைகள்

1. யாரேனும் குறை கூறினால் அது உண்மையாக இருந்தால் உன்னைத் திருத்திக் கொள். பொய்யாக இருந்தால் சிரித்துப் பொருட்படுத்தாமல் விட்டுவிடு.

2. பேசாதவர்களிடம் சென்று பேசுங்கள். வராதவர்கள் வீட்டுக்குப் போங்கள் கோபித்தவர்களைச் சமாதானப் படுத்துங்கள் இவை எல்லாம் அவர்களுடைய நலனுக்காகவே செய்யவேண்டும். அவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள். என்று பாராதே.

3. நீ வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்து போ மற்றவர்களின் முதுகின் மேல் ஏறிப்போக விரும்பாதே அது உனக்கு ஆபத்து.

4. உண்மை சொல்லப் பழகிக் கொள்ளுங்கள் உறுதியை நெஞ்சில் தேக்கிக் கொள்ளுங்கள் திறமைகள் தம் அறிவு என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

5. ஆரோக்கியமில்லாத காமம், வெகுளி, சுயநலம், பேராசை பற்றிய அழுக்கான வாழ்க்கையைக் கைவிடுங்கள் அன்பு, தயை, பொறுமை, தியானம் ஆகியவற்றை வளர்க்கும் தூய்மையான வாழ்க்கையை மேற் கொள்ளுங்கள்.

## சிந்தனைத்துளிகள்

* பணக்காரனும் தூங்க மாட்டான் பைத்தியக் காரனும் தூங்கமாட்டான்.
* உண்மையான அன்பு ஏழை, பணக்காரன் என்று தரம் பிரிக்காது.
* நல்வினையே எமக்கு விதியாய் அமைகிறது.
* உண்மையைக் கடைப்பிடிப்பவர்கள் ஆயிரம் வீரர்களை விட வலிமை மிக்கவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தத்துவ முத்துக்கள்

* சோம்பலின் விளைவு வறுமை, முயற்சியின் விளைவு மூலதனம்.

* பிறர் செய்வதில் எது உனக்குப் பிடிக்கவில்லையோ அதை நீ மற்றவர் களுக்கு செய்யாதே.

* அழகோடு அகங்காரம் கூடியிருந்தால் அந்த அகங்காரமே உன் அழகைக் கெடுத்து விடும்.

* பணம் இல்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது பணம் இருந்தால் உன்னை உனக்கே தெரியாது.

* நீ சந்தோசமாக இருக்கும் போது வாக்குறுதிகளைக் கொடுக்காதே நீ கவலையோடு இருக்கும் போது கடிதங்கள் எழுதாதே.

## செய்யவேண்டியன

01. இறைவனை வணங்குக.
02. இனிமையாகப் பேசுக.
03. உண்மையே பேசுக.
04. அன்பாகப் பேசுக.
05. நன்மையே பேசுக.
06. மெதுவாக பேசுக.
07. சிந்தித்துப் பேசுக.
08. சபையறிந்து பேசுக.
09. சமயமறிந்து பேசுக.
10. பேசாதிருந்தும் பழகுக.
11. சொல்வதையே செய்க.
12. சோம்பலை அகற்றுக.
13. கோபத்தை நீக்குக.
14. யோசித்துச் செய்க.
15. செருக்கை அடக்குக.
16. உயர்வையோண்ணுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொள்ள வேண்டியன

01. ஏழ்மையில் நேர்மை.
02. தோல்வியில் விடாமுயற்சி.
03. துன்பத்தில் துணிவு.
04. செல்வத்தில் தியாகம்.
05. பதவியில் பணிவு.
06. கோபத்தில் பொறுமை.
07. அன்பில் தூய்மை.
08. அடக்கத்தில் எளிமை.
09. உழைப்பில் விருப்பம்.
10. பேச்சில் சிக்கனம்.
11. கல்வியில் ஆர்வம்.
12. கடமையில் பற்று.

## வெற்றியின் இரகசியம்

அன்பு காட்டு – ஆனால் அடிமையாகிவிடாதே

இரக்கங்காட்டு – ஆனால் ஏமாந்து போகாதே

பணிவாய் இரு – ஆனால் கோழையாய் இராதே

கண்டிப்பாயிரு – ஆனால் கோபப்படாதே

தர்மம் செய் ஆனால் ஆண்டி ஆகிவிடாதே

பொருளைத்தேடு – ஆனால் கடவுளை மறந்துவிடாதே

வீரனாய் இரு – ஆனால் போக்கிரியாய் இராதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து

சிவபதமடைந்த

அமரர்

## செல்லப்பா சின்னத்தங்கம்

அவர்கள் நோயுற்ற போது அருகிருந்து உதவியவர்களுக்கு அவர்களின் மறைவின் போது நேரில் வந்து அனுதாபங்கள் தெரிவித்தவர் களுக்கும், தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல் கூறி எமது துக்கத்தில் பங்கு கொண்ட அன்புள்ளங்களுக்கும், இறுதிக்கிரியைகளில் முன்னின்று பங்களித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் இறுதிக்கிரியை நடாத்திய அந்தணரிற்கும், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை புரிந்தவர்களுக்கும் இம் மலரினை அழகுற அமைத்து தந்த ஸ்ரீ கண்ணகி அச்சகத்தினருக்கும் மற்றும் யாவருக்கும் எமது மனப் பூர்வமான நன்றிகளையும் வணக்கங் களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**நன்றி**

**தற்காலிகமுகவரி**
இராஜவீதி, தோப்பு,
அச்சுவேலி.

**நிரந்தரமுகவரி**
பலாலி கிழக்கு,
பலாலி.

**இங்ஙனம்**
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பரம்பரை

சின்னர் + சின்னாச்சி

- பொன்னையா (அமரர்)
- சின்னத்தங்கம் (அமரர்)
  - பொன்னையா + பொன்னுப்பிள்ளை
  - நல்லபிள்ளை (அமரர்) + தங்கராசா
    - மோகனாதேவி + செல்வக்குமார்
      - லக்ஷனா
      - தலக்ஷன்
      - டிலக்ஷி
    - திருலோகச்சந்திரன் (லண்டன்)
    - லலிதாதேவி + சிவதர்ஷன் (டோகா)
      - கிலெக்ஷிகா
      - சுலக்ஷன்
    - ரஞ்சனாதேவி
    - ரஜிதாதேவி
- பொன்னு (அமரர்)
- சின்னத்துரை
- இளையதம்பி
- சரவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரம்பரை நகர்வு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.

எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.

எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.

உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.

எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.


எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.

எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.

மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

இந்த மாற்றம் உலக நியதியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ கண்மணி அச்சகம், அச்சுவேலி